**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.**

முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் திங்கள்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.60/2023**
**CNR.NO.TNMY08-002608-2023**

<table>
<tr><td>குற்றமுறையீட்டாளர் :</td><td>அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>ஆனைக்காரன் காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்.<br>குற்ற எண்.1124/2020</td></tr>
<tr><td colspan="2">/எதிராக/</td></tr>
<tr><td>குற்றம்சாட்டப்பட்டவர்:</td><td>ராஜகோபால், 46/2020 த/பெ. கலியபெருமாள்,<br>எண்.17 ஜம் ஜம் நகர், கோவில்பத்து, சீர்காழி.</td></tr>
<tr><td>குற்றச்சாட்டு</td><td>இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304 (A)</td></tr>
<tr><td>குற்றம் நிகழ்ந்த நாள்</td><td>23.12.2020</td></tr>
<tr><td>தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்</td><td>24.12.2020</td></tr>
<tr><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td>25.12.2020</td></tr>
<tr><td>எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td>25.12.2020</td></tr>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு 240-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள்</td><td>24.06.2025</td></tr>
<tr><td>விசாரணை தொடங்கிய நாள்</td><td>25.11.2025</td></tr>
<tr><td>விசாரணை முடிவடைந்த நாள்</td><td>30.03.2026</td></tr>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு 311-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம்</td><td>இல்லை</td></tr>
<tr><td>முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள்</td><td><table>
<tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.1</td><td>25.11.2025</td><td>25.11.2025</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.2</td><td>25.11.2025</td><td>25.11.2025</td></tr>
</table></td></tr>
</table>



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:37:49 +0530

<table>
<tr><td></td><td><table><tr><td>அரசு தரப்பு சாட்சி.3</td><td>25.11.2025</td><td>25.11.2025</td></tr><tr><td>அரசு தரப்பு சாட்சி.4</td><td>19.02.2026</td><td>19.02.2026</td></tr></table></td></tr>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>16.03.2026</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விபரம்</td><td>இல்லை</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம்</td><td>இல்லை</td></tr>
<tr><td>வழக்கு விசாரணையில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம்</td><td>போலிசார் எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டது.</td></tr>
<tr><td>தீர்மானம்</td><td>எதிரி இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304Aன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானம்.</td></tr>
<tr><td>முடிவு</td><td>முடிவாக, அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304Aன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் இந்நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து இவ்வழக்கின் எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 255(1) பிரிவின்படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
</table>

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 06.01.2021 தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 30.03.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A சத்தியமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

## <u>தீர்ப்புரை</u>

1. இவ்வழக்கானது கடந்த 23.12.2020ந் தேதி இரவு 10.15 மணிக்கு இவ்வழக்கு சாலை விபத்தில் இறந்து போன ஜோதி என்பவர் அவரது TN 91 V 5537 என்னும் பதிவெண் கொண்ட TVS XL 100 இருசக்கர வாகனத்தில் சிதம்பரம் – சீர்காழி மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி புத்தூர் ஆசாத் தெருவில் செல்லும் சாலை எதிரே வந்து கொண்டிருந்தபோது,



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:37:56 +0530

எதிர் திசையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 04 AK 9906 என்னும் பதிவெண் கொண்ட MAHINDRA QUANTO காரை அதிக வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த எதிரி ஜோதி பயணித்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி சம்பவ இடத்திலேயே ஜோதிக்கு இறப்பு நேர்ந்தது சம்பந்தமாக மேற்படி எதிரியின் செய்கை இந்திய தண்டனை சட்டம், 1860 பிரிவுகள் 279, 304A ன் கீழ் தண்டிக்கத்தக்கது என்று கருதி குற்றவியல் விசாரணை முறை சட்டம், 1973 பிரிவு 173(2)–ன் கீழ் ஆனைக்காரன்சத்திரம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 26.04.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அவருக்கு கடந்த 24.06.2025ஆம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 207–ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. பின்னர் கடந்த 24.06.2025 ஆம் தேதி இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304Aன் கீழ் குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரியிடம் விளக்கி கேட்கப்பட்டது. அதற்கு எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும் கூறினார். எனவே, இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்காக உத்திரவிடப்பட்டது.

3. அதன் அடிப்படையில் இவ்வழக்கில் அரசுத் தரப்பில், அரசு தரப்பு சாட்சி.1 முதல் 4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 9 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சிகள் 2,3,6 முதல் 15 வரையிலானவர்கள் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் கொடுத்த குறிப்பாணையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

4. இவ்வழக்கில் கடந்த 16.03.2026 ஆம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாகத் தொகுத்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் 313(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சி, பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சியம் இல்லை என கூறினார். ஆகவே, எந்த ஒரு சாட்சியும் எதிரி தரப்பில் விசாரிக்கப்படாமல் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:38:25 +0530

5. அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சாட்சி.1 முதல் 4 சாட்சிகள் வாயிலாகவும், அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 9 சான்றாவணங்கள் வாயிலாகவும் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

6. எதிரி தரப்பில், இவ்வழக்கு சாலை விபத்து கண்ணுற்றதாக சொல்லப்படும் நபர்கள் எவரும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கு போலிசாரால் ஜோடிக்கப்பட்டது என்பதால் தான் சாட்சிகளை அவர்களால் ஆஜர்படுத்த முடியவில்லை என்றும், பெரிய வாகனம் என்பதால் போலிசார் எதிரி மீது இந்த பொய் வழக்கை புனைந்துள்ளார்கள் என்றும், வழக்கின் போக்கிற்கு ஏற்ப இந்த வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்.**

எதிரி மீது சுமத்தப்பட்ட இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304A ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

8) **தீர்வு:**

8.1) அரசு வழக்கு எவ்வாறு அமைந்துள்ளது மற்றும் அரசு தரப்பில் எதிரி மீது இந்திய தண்டனை சட்ட பிரிவு 304(A) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என பரிசீலிக்கும்போது, இவ்வழக்கில் இறந்துபோன ஜோதி என்பவர் காட்டுமன்னார்கோவில் பகுதியை சேர்ந்தவர் ஆவார். அவர் தனது வியாபார ரீதியாக சீர்காழிக்கு சென்றுவிட்டு சம்பவ நாளான 23.12.2020ம் தேதி இரவு சுமார் 10.15 மணிக்கு தனது TVS XL 100 இருசக்கர வாகனத்தில் சீர்காழி – சிதம்பரம் மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருக்கும்போது அவருக்கு எதிர் திசையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் நான்கு சக்கர காரை ஓட்டி வந்து அவர் மீது மோதியுள்ளார். அந்த விபத்தில் ஜோதி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். பிறகு அவரது உடல் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, தகவல் கேள்விபட்டு அங்கு வந்த ஜோதியின் மனைவியான புகார்தாரர் விபத்துபற்றி அறிந்து கொண்டு மறுநாள் காலை 7 மணியளவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார். அதை தொடர்ந்து எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவு 279, 304Aன் கீழ் முதல் தகவல் அறிக்கை



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:38:32 +0530

பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை முடிக்கப்பட்டு மேற்படி அதே பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கு இவ்வாறு அமைந்துள்ளது.

8.2) **அரசு தரப்பு சாட்சி 1ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர் இவ்வழக்கு சாலை விபத்தில் இறந்து போன நபரின் மனைவி என்பதும், கேள்விநிலை சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 20.12.2020ம் தேதி இரவு 9.00 மணியளவில் தனது செல்போனுக்கு தனது கணவர் எண்ணிலிருந்து அழைப்பு வந்ததாகவும், தான் எடுத்து பேசியதில் தனது கணவர் புத்தூர் அருகில் அடிபட்டு இறந்து விட்டதாக யாரோ ஒருவர் தகவல் கூறியதாகவும், தான் சம்பவ இடத்திற்கு வருவதற்குள் தனியார் ஆம்புலன்சில் தனது கணவர் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டிருந்ததாகவும், அதன் பின்று மறுநாள் தானும் தனது மருமகனும் சேர்ந்து ஆனைக்காரன்சத்திரம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக அவருடைய புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர் தனது குறுக்கு விசாரணையில், விபத்து தொடர்பாக தனக்கு தகவல் கூறிய நபர் யார் என்று தெரியாது என்றும், தான் மறுநாள் காலை 06.00 மணிக்கு வந்து பார்த்தததாகவும், காலை 09.00 மணிக்கு புகார் கொடுத்ததாகவும், தனக்கு எழுதப் படிக்க தெரியாது என்றும், யாரோ எழுதி கொடுத்த புகாரில் தான் கையொப்பம் இட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

8.3) **அரசு தரப்பு சாட்சி 2ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் இவ்வழக்கு பார்வை மகசர் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் தேதி ஒரு நாள் தானும் ரங்கராஜன் என்பவரும் விபத்து நடந்த சம்பவ இடத்திற்கு வந்ததாகவும், போலிசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும், அதிலுள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக பார்வை மகசரில் உள்ள அவரது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8.4) **அரசு தரப்பு சாட்சி 3ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரும் இவ்வழக்கு பார்வை மகசர் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், பார்வை மகசரில் உள்ள அவரது சாட்சி கையொப்பத்தை



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:38:39 +0530

ஒப்புக்கொண்டு, அதிலுள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக பார்வை மகசரில் உள்ள அவரது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8.5) **அரசு தரப்பு சாட்சி 4ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது அவர் ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையத்தின் தற்போதைய ஆய்வாளர் என்பதும், இவ்வழக்கு புலன் விசாரணை அதிகாரி சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியளித்துள்ளதும் தெரியவருகிறது. அவர் தனது முதல் விசாரணையில் கடந்த 24.12.2020 ஆம் தேதி காலை 07.00மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயப்பிரகாஷ் நிலைய பொறுப்பில் இருந்த போது புகார்தாரர் கொடுத்த புகாரை பெற்று குற்ற எண்.1124/2020ல் இதச பிரிவுகள் 279, 304Aன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அதனை ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், அன்றைய தினமே காலை 09.00 மணியளவில் ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் அதனை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றையதினம் காலை 09.00 மணிக்கு இவ்வழக்கில் இறந்த ஜோதி என்பவரின் பிரேதத்தின் மீதான விசாரணையை சீர்காழி அரசு மருத்துவமனை சவ கிடங்கு முன்பு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் செய்ததாகவும், பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து அறிக்கை பெற்றதாகவும், கடந்த 25.12.2020ம் தேதியன்று 13.00 மணிக்கு குற்ற காரணம் கூறி எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்ததாகவும், பின்பு விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களையும் சோதனைக்காக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்ததாகவும், அவருக்கு பிறகு ஆய்வாளர் அமுதா ராணி வழக்குகளை மேல்விசாரணை செய்து வாகன அறிக்கை பெற்று, சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து, இறுதியாக புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக நீதிமன்றத்தில் இதச பிரிவுகள் 279, 304A ஆகியவற்றின் கீழ் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில் விபத்து சம்பந்தமாக மருத்துவமனையில் இருந்து தகவல் வரவில்லை என்றும், புகாரில் விபத்து பற்றி அறிந்தவர்களாக குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் காரின் முன்பக்க இடது புறம் தான் உடைந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், சம்பவ இடம் தேசிய நெடுஞ்சாலை



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:38:46 +0530

என்றும், அந்த பகுதியில் வேகத்தடை ஏதும் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**9.** மேலே குறிப்பிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும் இந்த வழக்கின் சூழ்நிலைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, இ.த.ச பிரிவு 304Aன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு விட்டதா என ஆராயும்போது, மேற்படி சட்டப்பிரிவானது முரட்டுத்தனமான அல்லது அசட்டையான செய்கை மூலமாக பிறருக்கு மரணம் விளைவிப்பதை தண்டனைக்குரிய குற்றமாக கருதுகிறது. இவ்வழக்கின் பொருண்மைகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் முதலாவதாக, எவருக்கேனும் மரணம் நேர்ந்துள்ளதா என்பதை பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது, அ.சா.1ன் கணவரான ஜோதி, என்பவருக்கு 23.12.2020ம் தேதி இரவு சுமார் 10.15 மணிக்கு மரணம் ஏற்பட்டது என்பது அ.சா.1ன் சாட்சியின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களான அ.சா.ஆ.7 பிரேத விசாரணை அறிக்கை மற்றும் அ.சா.ஆ.8 பிரேத பரிசோதனை அறிக்கை ஆகியவற்றின் மூலம் நிரூபணமாகிறது.

10. இரண்டாவதாக, ஏதேனும் முரட்டுத்தனமான அல்லது அசட்டையான செயல் காரணமாக மரணம் நிகழ்ந்ததா என்பதை பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது, மேற்படி மரணம் ஏற்படுவதற்கு சற்று முன்பு இரவு 10.15 மணிக்கு மேற்படி ஜோதி என்பவருக்கு சாலை விபத்து ஏற்பட்டதும், அந்த விபத்தானது எதிர்மனுதாரர் காவல்நிலைய எல்லையில் அமைந்த புத்தூர் மதகடி ஆசாத் தெரு, எதிரே மெயின்ரோட்டில் வைத்து, TN 91 V 5537 என்கிற பதிவெண் கொண்ட TVS XL 100 இருசக்கர வாகனத்தில் இறந்து போன ஜோதி பயணம் செய்தபோது, அவருக்கு நேர் எதிராக வந்த MAHINDRA QUANTO கார் மோதி விபத்து ஏற்பட்டது என்பதும் அ.சா.1, அ.சா.4 ஆகிய சாட்சிகளின் வாய்மொழி சாட்சியம் மூலமாக நிரூபணமாகிறது. அதற்கு வலு சேர்க்கும் விதமாக, மேற்படி TVS XL 100 வாகனத்தின் தணிக்கை அறிக்கையில் 'Front fork both bent backward. Front wheel Assembly broken. Front wheel mudguard damaged. Front headlight both indicators, meter assembly broken. Front chassis frame bent backward. Front brake lever mount broken. Front right rear view mirror broken. Fuel tank damaged' என்கிற குறிப்பும் அமைந்து மேற்படி ஜோதிக்கு வாகன விபத்து ஏற்பட்டுள்ளது என்னும் சங்கதி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

11. மூன்றாவதாக, மேற்படி சாலை விபத்து காரணமாக தான் ஜோதியின் மரணம் ஏற்பட்டதா என்பது பற்றி ஆராய்ந்து பார்க்கும் போது, அ.சா.ஆ.7 ஆன பிரேத விசாரணை அறிக்கையில் மரணம் ஏற்பட்ட விதம் குறித்து "மேற்படி ஜோதி என்பவருக்கு சாலை விபத்தில் இறப்பு ஏற்பட்டது" என முடிவு காணப்பட்டுள்ளது மற்றும் அ.சா.ஆ.8 ஆன பிரேத பரிசோதனை



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:38:54 +0530

அறிக்கையில் இறப்பிற்கு காரணம் 'Polytrauma die due to hemorrhagec shock' என்றும் குறிக்கப்பட்டுள்ள குறிப்புகள் அனைத்தும் மேற்சொன்ன சாலை விபத்து காரணமாக தான் ஜோதிக்கு இறப்பு ஏற்பட்டுள்ளது என்பதை அறுதியிட்டு நிரூபணம் செய்கிறது.

12. நான்காவதாக, இவ்வழக்கின் எதிரியின் முரட்டுத்தனமான அல்லது அசட்டையான செய்கையால் தான் இந்த வழக்கில் சொல்லப்பட்ட மேற்படி ஜோதியின் இறப்பிற்கு காரணமான சாலை விபத்து ஏற்பட்டதா என்பதை ஆராய்ந்து பார்க்கும்போது, இவ்வழக்கு வாகன விபத்தை கண்ணுற்ற சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் இவ்வழக்கு வாகன விபத்தை நேரில் காணாத சாட்சிகள் ஆவார்கள். இவ்வழக்கில் பட்டியலிடப்பட்டுள்ள கண்ணுற்ற சாட்சிகள் புலம் பெயர்ந்து சென்றுவிட்ட காரணத்தால் அவர்கள் வசிக்கும் இடம் தேடி கண்டுபிடிக்கமுடியாத நிலையில் அவர்கள் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், இவ்வழக்கில் இரு வாகனங்களும் எதிர் எதிரே மோதிக்கொண்டதாக அரசுதரப்பு வழக்கு அமைந்துள்ளது. அவ்வாறு எதிர் எதிரே மோதியிருந்தால் காரின் வலது புற முன்பகுதியில் சேதாரம் ஏற்படவே சாத்தியக்கூறுகள் அதிகம். ஆனால், காரின் முன்பக்க இடது புறத்தில் எவ்வாறு சேதாரம் ஏற்பட்டது என்பது பற்றி அரசு தரப்பு சாட்சிகள் எவரும் தெளிவுபட சாட்சியமளிக்கவில்லை. அவ்வாறு இடது புறத்தில் சேதாரம் ஏற்பட்டுள்ளது உண்மையிலேயே இறந்துபோன ஜோதி என்பவர் தனது இருசக்கர வாகனத்தை சாலை விதிகளுக்கு உட்பட்டு சாலையின் இடதுபுற ஓரத்தில் தான் ஓட்டிக்கொண்டு சென்றாரா என்கிற நியாயமான சந்தேகம் எழுகிறது. ஆகவே, இவ்வழக்கின் எதிரி முரட்டுத்தனமாக அல்லது அசட்டையாக தனது காரை செலுத்தினார் என்றோ, அதன் காரணமாக தான் இவ்வழக்கு சாலை விபத்து ஏற்பட்டது என்றோ முடிவு செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 304Aன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13. எதிரி மீதான **இ.த.ச. பிரிவு 279ன்** கீழான குற்றச்சாட்டை பொறுத்தளவில், மேற்படி சட்டப்பிரிவானது <u>மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமாக ஒரு பொது பாதையில் வாகனத்தை முரட்டுத்தனமாக அல்லது அசட்டையாக</u> செலுத்துகிற செயலை தண்டனைக்குரிய குற்றமாக கருதுகிறது. இவ்வழக்கில் சாலை விபத்தை கண்ணுற்ற சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படாத நிலையில், எதிரி அவரது காரை முரட்டுத்தனமாக அல்லது அசட்டையாக செலுத்தினார் என முடிவு செய்வதற்கு முகாந்திரம் இல்லை என்றும் அதனால்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:39:00 +0530

எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 279ன் கீழான குற்றச்சாட்டும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. முடிவாக, அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304Aன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் இந்நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து இவ்வழக்கின் எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 255(1) பிரிவின்படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:39:05 +0530

**நீதித்துறை நடுவர்**
**சீர்காழி.**

**1.அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திருமதி. மஞ்சுளா | புகார்தாரர் |
| அரசு தரப்பு சாட்சி.2 | திரு.ஜெயகாந்தன் | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.3 | திரு. ரங்கராஜன் | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.4 | திரு. ராஜா | தற்போதைய காவல் அதிகாரி |

**2.அரசு தரப்பு குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்.1/ அரசு தரப்பு சாட்சி.1 | 24.12.2020 | அசல் புகார் மனு |
| அரசு தரப்பு சான்றாவணம்.2/ அரசு தரப்பு சாட்சி.2 | 24.12.2020 | பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து |

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்.3/ அரசு தரப்பு சாட்சி.3 | 24.12.2020 | பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து |
| அரசு தரப்பு சான்றாவணம்.4/ அரசு தரப்பு சாட்சி.4 | 24.12.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்.5/ அரசு தரப்பு சாட்சி.4 | 24.12.2020 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்.6/ அரசு தரப்பு சாட்சி.4 | 24.12.2020 | மாதிரி வரைபடம் |
| அரசு தரப்பு சான்றாவணம்.7/ அரசு தரப்பு சாட்சி.4 | 24.12.2020 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்.8/ அரசு தரப்பு சாட்சி/4 | 24.12.2020 | பிரேத விசாரணை அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்.9/ அரசு தரப்பு சாட்சி.4 | 29.12.2020 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

**3.அரசு தரப்பு சான்று பொருள் :**

| | |
|---|---|
| அரசு தரப்பு சான்று பொருள். | இல்லை |

**4.எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-** இல்லை

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:39:13 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

**குறிப்பு**

1. தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின்போது எதிரிகள் நீதிமன்ற பிணையில் இருந்தார்.
3. இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

**நகல்**

மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.